
தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 22 செப்டம்பர் 2022 கனி 10



ஆசிரியர்
B. அர்ஜுனன்

MONTHLY

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 33
தலைப்பு : சோர்வு – Faint
வேத வாசிப்பு : லூக்கா 18:1-8

1. தேவன் சோர்ந்து போவதில்லை - ஏசா.40:28
2. ஆபத்தில் நீ சோர்ந்துபோவாயானால் - நீதி.24:10
3. நன்மை செய்கிறதிலே சோர்ந்துபோகாதிருங்கள் - கலா.6:9



இவர்களுடைய
ஊழியத்திற்காக ஜெபியுங்கள்




R.MELKI, Evangelist
CHURCH OF CHRIST
2/262 Buddha Street, Alagesa Nagar
Kanchipuram -600 069
KANCHIPURAM DT
Cell:70925 51402


the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509







## THE WORD OF CHRIST
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 22 செப்டம்பர் - 2022 கனி - 10


**ஆசிரியருரை**

## கிறிஸ்தவர்கள் நான்கு காரியங்களிலிருந்து விலகியிருக்கவேண்டும்

**The Christians Should Abstain from Four Things**



கிறிஸ்தவனாயிருந்தால் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என அநேகர் நினைக்கின்றனர். அது தவறாகும். ஒரு கிறிஸ்தவன் இப்படித்தான் வாழவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். ஆகையால் கிறிஸ்தவர்கள் சில காரியங்களுக்கு விலகியிருக்கவேண்டும் என எருசலேம் சபையில் மூப்பர்களுடன் திட்டமிடப்பட்ட சிலவற்றை நாம் இவ்வேளையில் தியானிப்போம். "எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்க வேண்டுமென்பதே" (அப்.15:28).

முதலாவது நாம் **விக்கிரகங்களுக்குப்** படைத்தவைகளைக்குறித்த விஷயத்தில் அவைகளுக்கு விலகியிருக்கவேண்டும். ஏன்? என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது. இதைக்குறித்து பவுல் விளக்கும்போது; "மாம்சத்தின்படியான இஸ்ரவேலரைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமா யிருக்கிறார்களல்லவா?" (1கொரி.10:18). அதைப்போல விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவை களைப்புசிக் கிறவர்கள் அவைகளோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். ஆகையால் அவைகளுக்கு விலகவேண்டும். நாம் தேவனோடு ஐக்கியமுள்ளவர்கள் விக்கிரகங்களோடு அல்ல. "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" (1கொரி.10:16). இப்படி ஐக்கியப்பட்டுள்ள நாம் விக்கிரகத்தோடே எப்படி ஐக்கியம் கொள்ளமுடியும். அதுவும் வேண்டும் இதுவும் வேண்டும் என்று அநேகர் நினைக்கின்றனர். ஒன்று சாக்கடையில் வாழுங்கள் அல்லது பரிசுத்தத்தை தெரிந்துகொண்டு கர்த்தரோடு வாழுங்கள். "அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை" (1கொரி.10:20) என மிகத்தெளிவாக பவுல் குறிப்பிடுகிறார். அவர்கள் பேய்களுக்கே பலியிடுகிறார்கள். அந்த பேய்களோடே உங்களுக்கு ஐக்கியம் உண்டா? அப்படியில்லாதபடியால் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவிஷயத்தில் ஒரு கிறிஸ்தவன் அதற்கு விலகியிருக்கவேண்டும். மேலும், "இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், அப்படி அறிவித்தவனிமித்தமும் மனச்சாட்சியினிமித்தமும் புசியாதிருங்கள்; பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது" (1கொரி.10:28). விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று நாம் அறிவோம். அது வெறும் கல்லாகவும், மரமாகவும், வெள்ளியாகவும், மனுஷனுடைய கைவேலையாகவும் இருக்கிறது. ஆனால் அதை நம்பி ஒருவன் அதற்கு

பலிசெலுத்தும்போது அவைகளில் நாம் பங்குகொள்ளக்கூடாது. பங்குகொள்ளா திருக்கும்போது அவனுக்குள் ஒரு சந்தேகம் ஏற்படும், ஒருவேளை அவன் அந்த வீணான விக்கிரகவழிபாட்டை விட்டு மனந்திரும்புகிறதற்கு ஏதுவான ஒரு சூழ்நிலை உருவாகும். ஆகையால் அப்படி அறிவித்தவனிமித்தமாக அதை புசியாதிருக்கவேண்டும் என பவுல் உணர்த்துகிறார்.

அதைப்போல **இரத்தத்திற்கும்** ஒரு கிறிஸ்தவன் விலகியிருக்கவேண்டும். ஏனென்றால் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பிலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது; இரத்தம் ஜீவனுக்குச் சமானம்; ஆகையால் எந்த மாம்சத்தின் இரத்தத்தையும் புசிக்கவேண்டாம்; சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தந்தானே; அதைப் புசிக்கிற எவனும் அறுப்புண்டுபோவான் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்" (லேவி.17:11,14). இது இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட கட்டளையே, நாம் சாப்பிடலாமே என்று அநேகர் நினைப்பதுண்டு. சில காரியங்கள் நமக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. ஆகையால் அப்போஸ்தலர்கள் சொல்லும்போது; இரத்தத்திற்கும் என்று குறிப்பாக சொல்வதை நாம் படித்தோம். மேலும், "கொழுப்பையாவது இரத்தத்தையாவது நீங்கள் புசிக்கலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்கள் எங்கும் உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும் என்று சொல் என்றார்" (லேவி.3:17). தேவன் ஆதியிலிருந்தே சில காரியங்களை நித்திய கட்டளையாக ஸ்தாபித்திருக்கிறார். எப்படி ஆதிமுதல் பாவத்தை வெறுத்தாரோ அதைப்போல இரத்தத்தையும் தம்முடைய பிள்ளைகள் புசிக்கக்கூடாது என்ற கட்டளையை கொடுத்திருக்கிறார். இவைகளை நாம் உற்றுநோக்கிப்பார்த்து அவைகளுக்கு விலகி இருப்பது நலமாயிருக்கும்.

கர்த்தர் ஆறு காரியங்களை வெறுக்கிறார்; ஏழும் அவருக்கு அருவருப்பு; அவை எதுவென்றால்; "மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங்கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரர்களுக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே" (நீதி.6:16-19). இதிலே ஒன்றுதான் இரத்தம் சிந்தும் கை நாம் இரத்தக் கறைகள் உள்ளவர்களாக இருக்கக்கூடாது என தேவன் விரும்புகிறார். ஆகையால் ஒட்டுமொத்தத்தில் இரத்தத்திற்கு நாம் விலகியிருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். காயீன் ஆபேலின் சம்பவத்தில் காயீனை கர்த்தர் வெறுத்தார். காரணம் என்ன? அவனிடத்தில் அவனுடைய சகோதரரைப்பற்றி கேட்கும்போது அவன் நான் அவனுக்கு காவலாளியோ என்றான். "அதற்கு அவர்; என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது" என்றார் (ஆதி.4:10). முதல் கொலையாளியாக காயீன் மாறினான். சகோதரனுடைய இரத்தத்தை பூமியில் சிந்தினான். இதை தேவன் ஏற்றுக்கொள்ள வில்லை. இந்த கொலைபாதகச் செயல் தொடர்ந்து இன்றும் நீடிக்கிறது. ஆகையால் மாபெரும் கட்டளையை தற்போதும் நாம் பெற்றவர்களாக இருக்கிறோம். தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் எச்சரிப்புடன் இருந்து. இரத்தத்திற்கும் இரத்தம் சிந்த தீவிரிப்பதற்கும் பங்காளிகளாகாதிருங்கள்.

மூன்றாவது **நெருக்குண்டு செத்ததிற்கும்**. ஆதியிலே நம்முடைய முற்பிதாக்களுக்கும் இவைகள் கட்டளையிடப்பட்டிருந்தது. "தானாய் இறந்துபோனதையாவது, பீறுண்டதையாவது, புசித்தவன் எவனும், அவன் சுதேசியானாலும் பரதேசியானாலும், தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி,

சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பானாக; பின்பு சுத்தமாயிருப்பான்" (லேவி.17:15). கர்த்தருடைய கட்டளைகளை அறியாதவர்கள் இவைகளை துணிந்து சாப்பிடுகிறார்கள். சிலவீடுகளில் கோழிகள் இருக்கும் ஆனால் அவைகளை அடித்து சாப்பிடமாட்டார்கள். என்றாவது ஒரு நாள் அவைகளுக்கு நோய் வந்து அல்லது ரோட்டில் அடிபட்டு இறந்துவிட்டால் அவைகளை அப்படியே எடுத்துவந்து சமையல் பண்ணிவிடுவார்கள். நல்லவைகளை எல்லாம் விற்றுவிடுவார்கள். ஒரு கிறிஸ்தவன் அப்படியிருக்கக்கூடாது சுத்தமானவைகளை சமைத்து சாப்பிடவேண்டும். கர்த்தர் மனுஷனுக்கு வேண்டியவைகளை கொடுத்திருக்கும்போது நெருக்குண்டு செத்ததை ஏன் சாப்பிடவேண்டும்? நீங்கள் தேவனுடைய ஜனங்கள் ஆகையால் தள்ளுண்டு போனதையும் நோய்கொண்டதையும், நெருக்குண்டு செத்ததையும் சமைத்து சாப்பிடாதிருங்கள். ஒருவேளை இந்த கட்டளைகளைப் பெற்றிருந்தும் மீறி சாப்பிடும்போது என்னவாகும். ஒன்று தேவ கோபம் நம்மீது பற்றியெரியும். மற்றொன்று அநேக நோயினாலும், இயலாமையினாலும் தள்ளப்பட்டு முடிவில் சரீரத்தில் பலபாடுகளை அனுபவிக்கவேண்டியவர்களாக தள்ளப்படுவோம். இப்படி மோசமான சூழ்நிலைக்கு தள்ளப்படாதிருக்க கர்த்தருடைய வசனத்திற்குச் செவிகொடுத்து நாம் இந்தவிதமான நெருக்குண்டு செத்ததிற்கும், தானாய் செத்ததிற்கும் விலகி தேவனுக்கு பரிசுத்தமானவர்களாக இன்றும் என்றும் ஜீவிக்க நம்மை காத்துக்கொள்ளுவோம்.

நான்காவது ஒரு கிறிஸ்தவன் மிகவும் முக்கியமாக **வேசித்தனத்திற்கு** விலகியிருக்க போதிக்கப்படுகிறான். ஏனென்றால்; "வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்" (1கொரி.6:18). நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாயிருக்கிறோம் என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவனும் நினைக்கவேண்டும். அப்படியிருக்கிறபடியால் நாம் கிறிஸ்துவின் சரீரத்தை வேசியின் அவயவங்களாக்கலாமா? கூடாதே. கிறிஸ்து என்னில் வாழுகிறார், நான் அவருக்குச் சொந்தமானவன், என்னை அவர் தம்முடைய இரத்தத்தினால் விலைக்கு வாங்கியிருக்கிறார் என்ற உணர்வு எப்பொழுதும் இருக்கவேண்டும். "வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்திற்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்" (1கொரி.6:13). சரீரத்திலே இருந்துகொண்டு நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிறோம். இந்த சரீரம் வேசித்தனத்திற்கு அல்ல கர்த்தருக்கே சொந்தமானது. விக்கிரகாராதனையும் வேசித்தனத்திற்கு இணையாக இருக்கிறது. "ஒரேநாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள்; அதுபோல் நாமும் வேசித்தனம்பண்ணாதிருப்போமாக" என பவுல் எழுதுகிறார் (1கொரி.10:8). வேசித்தனம் நம்முடைய சுயசரீரத்திற்கு விரோதமான ஒரு பாவச்செயலாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தன் தன் சரீரத்தை மிகவும் கவனமாக ஆண்டுகொள்ளவேண்டும். "ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும்" என போதிக்கப்படுகிறோம் (1கொரி.1:2). மோசமான கலாச்சாரங்கள் வந்து நாகரீகத்தை கூறுபோட்டுவிட்டது. இந்த விஷயத்தில் பரிசுத்தமானவர்களைப் பார்ப்பது அரிதாக இருக்கிறது. ஒவ்வொருவருடைய சரீரங்களும் கர்த்தருக்குச் சொந்தமானது. கணவன் மனைவியை, கர்த்தர் இணைத்தபடியால் இருவருடைய சரீரங்களும் அவரவருக்கு சொந்தமாக இருக்கிறது. இதில் மற்றவர்களுக்கு பங்கில்லை. இதிலே ஒவ்வொருவரும் தங்களுடைய சரீரங்களை வேசியின் சரீரங்களாக மாற்றாது பாதுகாத்துக்கொள்ளவேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள்.

இன்றைக்கு கிறிஸ்தவர்கள் விலகியிருக்கவேண்டிய நான்கு காரியங்களைக்குறித்து தியானித்தோம். உங்களுடைய வாழ்க்கையில் அவைகளைக்

கைக்கொண்டு வருகின்றீர்களா? அப்படியில்லை என்றால் இன்றே ஒரு தீர்மானம் எடுங்கள் அவைகளின்படி வாழும்படியாக உங்களை ஒப்புக்கொடுங்கள். நாம் இப்படித்தான் வாழுவேண்டும் என்ற ஒரு நியதியை தேவன் கிறிஸ்தவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளார். ஆகையால் நாம் அந்தப்படியாக வாழவேண்டும். இந்த விஷயத்தில் ஆதிமுதலாக நம்முடைய முற்பிதாக்கள் புறஜாதிகளுடைய மார்க்கபோதனைகளைக் கற்றுக்கொண்டு அநேகர் தேவனைவிட்டு விலகி சோரமார்க்கம் போனார்கள். அந்தவிதமாக போய்விடாதிருக்க வேதாகமத்தின் போதனைக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**ஸ்தோத்திரத்தோடே எல்லவற்றையும் புசிக்கலாமா?**

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப் படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல. அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்" என்கிறார் (1தீமோ.4:4,5). அதற்காக விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளை அவர்கள் அறிய ஸ்தோத்திரம் பண்ணிசாப்பிடலாம் என்று அர்த்தமல்ல.

பழையஏற்பாட்டில் விரிகுளம்பு இல்லாத ஒன்றும் புசிக்கவேண்டாம் என்ற கட்டளை இருந்தது. இதை மையமாக வைத்து ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப் படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல என்கிறார். ஒருவருக்கு மாமிசம் புசிப்பது இடையூறாக இருக்குமானால் அவர் நிமித்தமாக நீ மாமிசம் புசியாதிருக்க வேண்டும் என போதிக்கப்படுகிறோம். அந்த பெலவீனமான மனிதனுக்கு முன்பாக நான் அப்படித்தான் செய்வேன் என்று சொல்லி புசிப்போமானால் அவனுடைய மனதை புண்படுத்துகிறவர்களாக இருப்போம். இதை தேவன் விரும்பவில்லை. உனக்கு நலமென்று நிச்சயித்த காரியத்தில் நீ நிலைத்திரு. ஒருவன் மரக்கறிகள் மட்டும் புசிக்கிறான். ஒருவன் மாம்சம் மட்டும் புசிக்கிறான். ஒருவன் எல்லாமாம்சத்தையும் புசிக்கிறான். இதில் அவரவர் நிச்சயமுள்ளவர்களாக இருக்கவேண்டும். பொதுவாக தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. தேவன் அவைகளை ஆசீர்வதித்து மனிதனுக்கு கட்டளையிட்டார். தேவன் ஆசீர்வதித்ததை மனிதன் தீட்டாக எண்ணக்கூடாது. உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

ஜெபியுங்கள்



- நமது மாத இதழ் 30 வது ஆண்டில் அடியெடுத்து வைத்தமைக்காக நன்றி சொல்லி...
- வாசகர் அனைவருக்காக...
- இம்மாதம் கிடைக்கப்பெற்ற 213 புதிய வாசகர்களுக்காக...
- மொபைல் கான்பிரன்ஸ் மூலம் நடைபெறும் வேதாகம பள்ளிக்காக...
- தேனி மாட்ட ஊழியங்களுக்காக...
- நமது வேதாகம பள்ளி மாணவர்களுக்காக...
- மொபைல் கான்பிரன்ஸ் மூலமாக நடைபெறும் அனைத்து ஊழியங்களுக்காக...



**The Word of Christ**
**Canara Bank A/c No.094620100552**
**IFSC:CNRB0000946**

**மாத இதழுக்கான**
**சந்தா செலுத்த இரு வழிகள்**

**India Post Payments Bank**
**ARJUNAN**
**048410018536**
**IPOS0000001**



# கெட்ட வார்த்தை

## Bad Language

-J.C.Choate

நீங்கள் ஒரு மோசமான நபரா? நிச்சயமாக நீங்கள் சரியானவர் அல்ல என்று நீங்களே ஒத்துக்கொள்வீர்கள். இருப்பினும் நாம் அனைவரும் பாவிகளாக இருப்பதினாலும் அதாவது கிறிஸ்து இல்லாமல் நாம் அனைவரும் இழந்தவர்களாக இருப்பதினாலும் நாம் அனைவரும் கெட்டவர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டும், ஆனால் கிறிஸ்துவின் மூலம் மன்னிப்பும் சிறப்பான உலகத்தின் நம்பிக்கையும் உள்ளது.

கெட்ட மொழியைப் பற்றிய காரியம் என்ன? மொழியின் மூலம் நாம் நம் எண்ணங்களையும் யோசனைகளையும் வெளிப்படுத்தி ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளமுடியும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். நல்ல மொழியை அல்லது கெட்டமொழியை, நல்ல வார்த்தைகளை அல்லது கெட்ட வார்த்தைகளை பயன்படுத்துவதன் மூலம் நாம் இதைச் செய்கிறோம். தேர்வு நம்முடையதாயிருக்கிறது.

உலகின் பிறபகுதிகளில் இருக்கும் அநேகர் ஆங்கில மொழியை நன்றாக அறிந்திருக்கவில்லை. அவர்கள் தங்களுக்குப் புரியாத வார்த்தைகளை வெளிநாட்டவர்களிடமிருந்து கற்றுக்கொள்கின்றனர், ஆனால் அவர்கள் அவைகளை அடிக்கடி கேள்விப்படுவதினால் அவைகளை அவர்கள் பயன்படுத்த ஆரம்பிக்கின்றனர். அவர்கள் அவ்வார்த்தைகளின் பொருளை அறியாமல் வெறுமனே அவைகளை மீண்டும் மீண்டும் கூறுவதால் அவ்வார்த்தைகளில் சில சாப வார்த்தைகளாக இருக்கின்றன. நாம் - குறிப்பாக கிறிஸ்தவர்கள் - கவனக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தி மற்றவர்கள் வழிதவறிப் போக வழிநடத்துபவர்களாயிராதபடிக்கும் கவனமாக இருக்க வேண்டும்.

ஆங்கிலம் பேசுகிறவர்கள் மத்தியிலும் குறிப்பாக உலகத்தின் மேற்கத்திய நாடுகளில், ஏறக்குறைய அநேகர் சிந்தனையற்றவர்களாக தங்களுடைய உரையாடல்களில் தேவனுடைய அல்லது கிறிஸ்துவினுடைய நாமத்தைப் பயன்படுத்துகின்றனர். "ஓ தேவனே!", "இயேசு கிறிஸ்துவே!" என இவ்வாறாக பேசி, நாமத்தை சாபத்திற்கேதுவான வடிவில் பயன்படுத்துகின்றனர். வேதாகமம் இவ்விதமான வார்த்தைகளை வீணான அல்லது வெறுமையான அல்லது பயனற்ற வார்த்தைகளாக வகைப்படுத்துகிறது. இந்தப் பாடப்பொருளைக் குறித்து தேவன் சிலவற்றைச் சொல்லுகிறவராய் பத்து கட்டளைகளில் ஒன்று, "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருபாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்" (யாத்.20:7) என்பதாகும்.

கிறிஸ்துவின் சட்டத்தால் மோசேயின் சட்டம் (கட்டளை) மாற்றப் பட்டிருப்பதால் அது மனிதனை இனி ஒருபோதும் கட்டுப்படுத்துகிறதில்லை (யோவா.1:17). இருந்தபோதிலும் நாம் கர்த்தருடைய நாமத்தைக் கனப்படுத்தி, அந்த நாமத்தை மகிமையாகவும், பரிசுத்தமாகவும் எண்ணவேண்டும். மேலும் அந்த நாமத்தை ஒருபோதும் நாம் வீணிலே வழங்கக்கூடாது (மத்.6:9; வெளி.4:8).

தேவனுடைய நாமம் அடிக்கடி மற்றவர்களை சபிக்கும் விதத்திலும் பயன்படுத்தப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல், "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்" (ரோம.12:14) என்றார். மறுபடியும் அவர் நமக்கு "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கும் முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங் கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங் கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோம.12:17-21) என்று நமக்குச் சொல்லுகிறார்.

எனவே ஒருவர் நம்மை எப்படிக் காயப்படுத்தியிருந்தாலும் பரவாயில்லை, நாம் அவனை / அவளை சபிக்கும்படி தேவனிடம் முறையிடக்கூடாது. அப்படிப்பட்ட செயலை செய்ய அவரிடம் விண்ணப்பிக்கும்படிக்கு அவருடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது. பழிவாங்குதல் அல்லது யாரோ ஒருவர் மீது தேவனுடைய சாபங்களை வருவிப்பது நமக்குரியது அல்ல. அந்த நபரை கையாள்வதை நாம் தேவனிடம் விட்டுவிட வேண்டும்.

இன்னொரு வழியில் தேவனுடைய நாமம் வீணிலே வழங்கப்படுகிறது, ஒரு நபர் தான் உண்மையைத்தான் சொல்லுகிறேன் என்று தேவனுடைய நாமத்தினால் சத்தியம் செய்யும்போது தேவ நாமம் வீணிலே வழங்கப்படுகிறது. கிறிஸ்து அவருடைய நாட்களில் இருந்தவர்களுக்கு, "அன்றியும், பொய்யாணை யிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம்பண்ண வேண்டாம்; வானத்தின்பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். பூமியின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது மகாராஜாவி னுடைய நகரம். உன் சிரசின்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே. உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" (மத்.5:33-37) என்று சொன்னார்.

இதைப்போலவே யாக்கோபு, "விசேஷமாய், என் சகோதரரே, வானத்தின்பேரிலாவது, பூமியின்பேரிலாவது, வேறெந்த ஆணையினாலாவது சத்தியம்பண்ணாதிருங்கள்; நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்" (யாக்.5:12) என்று சொல்லுகிறார். இயேசுவும் யாக்கோபும் வெறுமனே ஆம் மற்றும் இல்லையென்று சொல்லுவதே போதுமானதாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நாம் சொல்லுகின்றது உண்மை என நிரூபிக்க, நாம் தேவனுடைய நாமத்தையோ வேதாகமத்தையோ அல்லது வேறு ஏதோ ஒன்றையோ பயன்படுத்தக்கூடாது.

**வேதவாக்கியங்களின்படி**
**கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு**

- Jim Massey

– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்

**பாடம் 27**




**எப்படி அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டாம்**

**வரைகுறிப்பு**

1. முதல் அங்கத்தினர்
2. மிக செல்வந்தரான அங்கத்தினர்
3. "செயல்படும்" மூப்பர்
4. அரசியல் செய்தல்
5. சுவிசேஷகருக்குப் பிரியமானது
6. முன்மாதிரியாய் இருப்பதை தவிர வேறு ஏதாகிலும் வழிமுறை

**கலந்துரையாடல்**

**1. முதல் அங்கத்தினர் நிலை:**

எப்படி அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை தெளிவாக காண்பதற்கு எந்த சில வழிகளில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டாம் என்று முதலில் காண்பது நன்மையானதாக இருக்கிறது. இவைகள் மனுஷருடைய வழி முறையாயிருக்கிறது, தேவனுடைய வழி முறையல்ல. அவைகள் தேவனுடைய திட்டத்துக்கு மாறானவைகளும் அந்ததிட்டத்தை கெடுத்துப் போடுகிறவைகளுமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு வழிமுறைதான் முதல் அங்கத்தினரை நியமிப்பதாக இருக்கிறது. சில சமயங்களில் இவர்கள் "அங்கீகார அங்கத்தினர்" அல்லது சபையின் அங்கத்தினர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். கிராமத்துக்கு பிரசங்கியாரை அழைத்து வந்த மனுஷன் அடிக்கடி தன்னைக் குறித்து தான் ஒரு மூப்பராக இருப்பதற்கு போதுமான முக்கியத்துவம் உள்ளவராய் இருப்பதாக எண்ணுகிறார். ஆனால் நாம் வேதாகமத்தில் ஒருபோதும் "அங்கீகரிக்கப்பட்ட அங்கத்தினர்கள்" என்று வாசிக்கிறதில்லை. ஒரு பிராந்திய சபையின் முதல் அங்கத்தினராக இருக்கிறதென்பது ஒருவரை முக்கியத்துவம் வாய்ந்தவராக ஆக்குகிறதில்லை ஒரு சபையின் தொடக்கத்திலே ஒரு பாகமாக இருக்கும்படி ஆசீர்வதிக்கப்பட்ட நல்வாய்ப்பாக இருப்பதென்பது ஒரு நபரை ஒரு மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ ஆக்குகிறதில்லை.

**2. மிக செல்வந்தரான அங்கத்தினர்:**

அடிக்கடி அதிகமான செல்வம் அல்லது உடைமைகளை கொண்டவர் ஒரு மூப்பராக தேர்த்தெடுக்கப்படுகிறார். அந்த பிராந்திய சபையானது அவரைக் கனப்படுத்துகிறதினாலே அவர் அதிகமாக கொடுக்கிறதற்கு ஏதுவாக இருக்குமென்று ஒருவேளை எண்ணலாம். அவருக்கு இருக்கும் உலகத்துக்குரிய வல்லமையின் காரணமான அந்த பிராந்திய சபையார் ஒருவேளை அவருக்குப் பயப்படலாம். ஆனால் வேதாகமம் ஐசுவரியங்களுக்கு எதிராக எச்சரிக்கை செய்கிறது (1தீமோ.6:17). ஒரு மூப்பரானவர் பொருளாசை உள்ளவராகவோ இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவராகவோ இருக்கக்கூடாது (1தீமோ.3:3). ஒரு மூப்பராக இருக்கும் பணியை ஒரு மனுஷன் இழிவான ஆதாயத்திற்காக தேடுகிறவராய் இருக்கலாகாது (1பேது.5:2). ஒரு உலகத்துக்குரிய தலைவராக இருப்பது என்பது ஒருவரை ஒரு ஆவிக்குரிய வழிநடத்துனராக ஆக்குகிறதில்லை, அது அடிக்கடி இடறல் உண்டாக்குகிறதாய் இருக்கிறது. பூமிக்குரிய உடைமைகளை உடையவராய் இருக்கிறதென்பது ஒரு மனுஷன் தேவனிடத்தில் ஐசுவரியமுள்ளவராய் இருக்கிறார்

என்பதை குறிப்பிடுகிறதில்லை (லூக்.12:21) அநேகர் பூமிக்குரிய ஐசுவரிய முள்ளவர்களாயிருக்கிறார்கள் ஆனால் அவர்கள் நிர்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கத்தக்கவர்களும், தரித்திரரும், குருடரும் ஆவிக்குரியவகையில் நிர்வாணிகளுமாய் இருக்கிறார்கள் (வெளி.3:17). பூமிக்குரிய ஐசுவரியமானது ஒருவரை மூப்பருக்கான அல்லது உதவிக்காரருக்கான தகுதி உடையவராக ஆக்குகிறதில்லை.

**3. "செயல்படும்" மூப்பர்:**

அநேக மனுஷர்கள் தங்களை "செயல்படும் மூப்பர்" என்று அழைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் மூப்பர்களைப் போன்று செயல்படுகிறார் என்பதை இது குறிப்பிடுகிறது, ஆனால் அவர்கள் அவ்வாறு இருக்கிறதில்லை. ஒரு மனுஷன் நீண்ட காலமாக தன்னை ஒருவேளை ஒரு மூப்பர் என்ற அழைத்துக்கொண்டிருக்கலாம். இப்படியாக மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது தான் நியமிக்கப்பட வேண்டுமென்று அவர் உணருகிறார். ஆனால் "செயல்படும் மூப்பர்கள்" தேவனுடைய திட்டத்தை புரட்டிப்போடுகிறவர்களாகவும் கெடுத்துப்போடுகிறர்களாகவும் இருக்கிறார்கள். அந்த அலுவலர்கள் அவர்களுடைய தகுதிகளின் காரணமாக தேர்ந்தெடுக்கப்படுவது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. ஆனால் "செயல்படும் மூப்பர்கள்" மூப்பர்களுக்கான தகுதிகளை பூர்த்தி செய்யாமல் ஒரு மூப்பருக்கான ஆசீர்வாதங்களையும், கனத்துக்குரிய காரியங்களையும் உடையவர்களாயிருக்க விரும்புகிறார்கள். ஒரு கிறிஸ்தவனாக பாவனை செய்து கொண்டிருக்கிறவன் ஒருவன் கிறிஸ்தவனாகிறதற்கு தேவையான கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல் கிறிஸ்தவனாக பாவனை செய்கிறதற்கு ஒப்பாக இருக்கிறது. யாரோ ஒருவர் "செயல்படும் கிறிஸ்தவனாக" இல்லாத போதிலும் சபையானது என்ன செய்யும்? சபையார் அவரை ஒரு பாவனை செய்கிறவர் என்று புறக்கணிப்பார்கள். "செயல்படும் மூப்பர்களை" நியமிப்பது என்பது தேவனுடைய வார்த்தையுடனே கூட்டுவதாக இருக்கிறது (வெளி.22:18). இது கிறிஸ்துவின் சுவிசேஷத்தை புரட்டுவதாக இருக்கிறது (கலா.1:7,8). மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் நியமிப்பதற்கான தேவனுடைய திட்டத்தை மாற்றும் ஒரு பொய்யான திட்டமாக இருக்கிறது.

**4. அரசியல் செய்தல்:**

சபை அலுவலர்களை தேர்வு செய்வதில் சில சமயங்களில் அரசியல் நுழைந்து விடுகிறது. சபை அங்கத்தினர்கள் வேதவாக்கியங்களின் படியேயான முறைகளுடனே அரசியல் முறைமைகளை கலக்கும்படியாக சோதிக்கப்படுகின்றார்கள். அவர்கள் வாக்குகளை (ஓட்டுகளை) நாடுகிறவர்களாக இருந்தார்களேயாகில் ஒருவேளை அவர்கள் முகாம்களை நடத்தி ஓட்டுக்களை வேண்டி பிரச்சாரம் செய்யக்கூடும். சில சபையார் ஒருவேளை தங்களுடைய அலுவர்களுக்காக ஓட்டு போட்டிருக்கவும் செய்யலாம். இதற்காக இலஞ்சம் கொடுக்கப்பட்டு மிரட்டல்களும் செய்யப்படலாம். ஆனால் சபையிலே அரசியல் தொழிலுக்கான இடம் இல்லை. அரசாங்க அலுவலர்களை தேர்ந்தெடுப்பதில் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் ஒட்டுமொத்தமாக ஆவிக்குரிய அலுவலர்களை தேர்ந்தெடுப்பதில் இருந்து வித்தியாசமானதாக இருக்கிறது.

ஒரு மூப்பராக ஆவதற்கு தகுதியுடையவனாயிருக்கிற ஒரு மனுஷன் தன்னுடைய தகுதிகளை மற்றவர்களுக்கு நிரூபித்துக்காட்டும்படி முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர் சொற்பொழிவாற்ற வேண்டிய அவசியமோ தன்னைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டிய அவசியமோ இல்லை. சபையானது ஏற்கனவே அவருடைய ஜீவியத்தையும், அவர் தகுதியுடையவராய் இருக்கிறார் என்பதையும் அறிந்திருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் மற்ற மனுஷரோடே போட்டியிடுகிறவராக இருக்கிறதில்லை. எல்லா தகுதியுடைய மனுஷரும் நியமிக்கப்படவேண்டும் மற்றொருவர் தேர்வு செய்யப்படுகிறதினாலே எவர் ஒருவரும் தோற்கடிக்கப்படுகிறதில்லை. மூப்பர்கள்

வாக்களிப்பதினாலே தேர்வு செய்யப்படுகிறதில்லை, மாறாக அவர்கள் நியமிக்கப் படுகிறார்கள். மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் உருவாக்குவதற்காக அரசியல் செய்வது தேவனுடைய திட்டமல்ல.

**5. சுவிசேஷகருக்குப்பிரியமானது:**

மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்படும் சபையில் பணியாற்றும் பிரசங்கியார் தனக்குப்பிரியமான மனுஷனை நியமிப்பதற்கு அவரை தெரிந்துகொள்ளும்படியாக பலமாக சோதிக்கப்படலாம். இந்த மனுஷன் சுவிஷேகராயிருக்கிறவருக்கு பல தயவுகள் பாராட்டியிருக்கலாம். எனவே பிரசங்கியார் அந்த மனுஷன் அவருக்கு செய்த தயவுக்காக பிரதி உபகாரமாக ஏதாகிலும் செய்ய வேண்டும் அல்லது ஏதாகிலும் பதில் செய்ய வேண்டும் என்று பிரசங்கியார் உணரக் கூடும் அல்லது ஒரு சுவிசேஷகர் ஒருவேளை தன்னோடு ஐக்கியமாக இருப்பார் என்று கருதப்படக்கூடியவரே தனக்கு பிரியமான வகையில் சபையை நடத்தும் படியாக தேர்வு செய்யக்கூடும். ஒருவரை பிரசங்கியார் வருங்காலத்தில் நிர்பந்தம் செய்கிறபடி செய்கிற மூப்பராக ஒருவர் இருப்பாரேயாகில், அவர் இவரை மூப்பராக நியமிக்க ஒரு வேளை சம்மதிக்க கூடும். இவ்விதமான வழிகளிலும் மற்றும் பல வழிகளிலும் ஒரு சுவிசேஷகனாக இருக்கிறவர் செல்வாக்கு செலுத்தும்படியாக சோதிக்கப்படுவார். ஆனால் இவ்வாறு செய்வதென்பது பாரபட்சமற்ற தன்மையை விட்டு இவர் வழி விலகிச் சென்று கொண்டிருக்கிறார் (அப்.10:34). இந்த பிரசங்கியார் பட்சபாதமுள்ளவராக மாறிக் கொண்டிருக்கிறார். இவர் பாரபட்சம் காட்டுவதினாலே குற்றமுள்ளவராயிருக்கிறார். சுவிசேஷகனுடைய விருப்பத்துக்கு உகந்தவராக இருக்கிறதினாலே ஒரு மனுஷன் சபையிலே ஒரு அலுவலராக தகுதியடைய மாட்டார்.

**6. முன்மாதிரியாய் இருப்பதை தவிரவேறு ஏதாகிலும் வழிமுறை:**

உண்மையிலேயே இந்தபாடமானது சாத்தியமானவகையில் உத்தமம் அல்லாத மற்றும் தவறான வழிகளில் மூப்பர்களை தேர்வு செய்வது பற்றி எல்லாவற்றையும் குறிப்பிட இயலவில்லை. ஆனால் தேவனுடைய திட்டத்தின்படி முன்மாதிரியாக இருப்பதை தவிர வேறெந்த முறையும் ஒரு பொய்யான திட்டமாகவே இருக்க முடியும் என்பதை இது சொல்ல முடியும். மனுஷர்களை அலுவர்களாக நியமிப்பதில் அவர்களுடைய தகுதியாம்சங்களை முழுமையாக சார்ந்திராத எந்த முறைமையும் வேதவாக்கியங்களுக்கு முரண்பாடானதாகவும் தவறானதாகவும் இருக்கிறது. இதில் பிரவேசிக்கும் எந்தவொரு ஆலோசனையும் ஒரு மனுஷனுடைய கிறிஸ்தவகுணாதிசயம் மற்றும் திறமையை குறித்த காரியமல்ல, அது ஒரு பொய்யான அடிப்படைகொண்ட தேர்வு செய்தலாக இருக்கிறது. தேவன் அலுவர்களை முன்மாதிரியினாலே உருவாக்குகிறார்: மனுஷருடைய திட்டங்கள் இதை மாற்ற முயற்சி செய்யாமல் இருக்கக்கடவது.

கேள்விகள்

1. வேதாகமம் "அங்கீகார அங்கத்தினர்களை" குறித்து குறிப்பிடுகிறதா? ------------

2. வேதாகமம் "செயல்படும் மூப்பர்கள்" பற்றி குறிப்பிடுகிறதா?

3. பூமிக்குரிய ஐசுவரியங்கள் ஒருவரை ----- ஐசுவரியமுள்ளவர் ஆக்குகிறதில்லை.

4.ஒரு "செயல்படும் மூப்பர்" ஒரு "செயல்படும் கிறிஸ்தவன்"போன்று இருக்கிறாரா?

5.அரசியல் செய்வதில் பயன்படுத்தப்படும் 4 வழி முறைகளை குறிப்பிடுங்கள் -----, -------------, --------------, ------------------.

6. சபையின் அலுவர்களை தேர்வு செய்வதில் போட்டி ஏதேனும் இருக்கிறதா? ------

7. தேவன் பட்சபாத முள்ளவரல்ல என்று கூறும் வசனக்குறிப்பு என்ன?---------

8.தேர்ந்தெடுப்பதில் தேவனுடைய திட்டத்தை விவரிக்கும் ஒரு வார்த்தை ---------

9. தேவனுடைய திட்டத்தை மாற்றுவதற்கு எதிரான 2 வசனக்குறிப்பு--------, -----

10. சபை அலுவலர்களுக்காக அங்கத்தினர்கள் வாக்களிக்கிறார்களா?

ப.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

5



### பரிசுத்த வேதாகமத்தில் ஆபிரகாம்
### Abraham In The Holy Bible

1. நான் உன்னை திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் - ஆதி.17:5
2. உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும் - ஆதி.17:15
3. என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே - ஏசா.41:8
4. மோசே தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக்கொண்டான் - யாத்.3:6
5. ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் - ரோம.4:3
6. ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு - மத்.1:1
7. தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் - லூக்.3:8
8. உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான் - யோ.8:56
9. விசுவாசமார்க்கத்தார்கள் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் - கலா.3:9
10. ஆபிரகாம் உயிரோடிருந்த நாட்கள் 175 வருஷம் - ஆதி.25:7

இந்தப் பாடத்திற்கான கேள்வி:

**ஆபிரகாமுக்கு எத்தனை குமாரர்கள் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது?**

**விடை:** இரண்டு "ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன்" - கலாத்தியர் 4:22



பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

6



### பரிசுத்த வேதாகமத்தில் பேதுரு
### Peter In The Holy Bible


1. சீமோன், இவனுக்குப் பேதுரு என்கிற பெயரிட்டார் - மாற்.3:16
2. இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான் என்றார் - மத்.16:17
3. இயேசு அவர்களை நோக்கி என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் - மாற்.1:17
4. இயேசுவின் மகிமையை காணுதல் - லூக்.9:32
5. ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார் - மத்.17:27
6. பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவிற்று - யோ.18:27
7. சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப்போகிறேன் என்றான் - யோ.21:3
8. பெந்தெகொஸ்தே நாளில் 11 பேருடன் பேதுரு - அப்.2:14
9. பேதுருவின் நிழலாகிலும் படும்படி வைக்கப்பட்ட பிணியாளிகள் - அப்.5:15
10. கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் - லூக்.24:34

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**



**யாக்கோபும், கேபாவும், யோவானும் தூண்களாக எண்ணப்பட்டார்களா?**

**விடை:** ஆம், "எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது, தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும்..." - கலாத்தியர் 2:9



## விசுவாசமும் விசுவாச வீரர்களும் – Faith and Faithful Knights

பாடம்: 5

- K.R.K.Ravi Asir

**– சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

இன்னும் சங்.86:11ல் தாவீது, "கர்த்தாவே உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்; நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்" என்று சொல்லியிருக்கிறான். ஏனோக்கும் தேவனுடைய வல்லமையை முன்னிட்டு நடந்து, தேவனுடைய சத்தியத்திலே நடந்தவராக இருந்திருக்கிறான். அதன் காரணமாகவே அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று சாட்சி பெற்றவராயிருந்தான். ஞானமானது தன்னை சிநேகிக்கிறவர்களை நீதியின் வழியிலும் நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறது என்பதை நீதி.8:21 மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். இதன் மூலம் ஏனோக்கு தேவ ஞானத்தை சிநேகிக்கிவனாயிருந்து நீதியின் வழியிலும் நியாயத்தின் பாதைகளுக்குள்ளும் நடந்திருக்கிறான் என்பது மிகவும் தெளிவாகப் புலனாகின்றது. தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாகக் காணப்பட்ட தாவீது ராஜா தன்னுடைய சங்கீத புத்தகத்திலே "உமக்குப்பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக" என்று மிக அருமையாக சொல்லியிருக்கிறான் (சங்.14:10). கர்த்தருக்கு பிரியமானதைச் செய்ய வேண்டுமென்ற வைராக்கிய வாஞ்சை விசுவாச வீரனாகிய ஏனோக்குக்கு அதிகமாக இருந்திருக்கிறது. இன்னும் நாம் சங்.40:8 ம் வசனத்தை வாசிப்போமேயாகில் "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன் என்று தாவீது எழுதியிருப்பதைக் காணமுடிகிறது. தேவனுடைய தாசனாகிய ஏனோக்குக்கும் தான் தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய வேண்டும் என்ற விருப்பம் அவனுக்குள் இருந்ததன் காரணமாகவே அவன் தேவனுக்கு பிரியமானவனாக இருந்திருக்கிறான். தேவனாகிய கர்த்தர் "கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான்" என்று ஏசாயா 44:28 ல் முன்னுரைத்திருக்கிறார். ஏனோக்கோ தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான்.

சங்கீதக்காரனாகிய தாவீது, "அவர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார், பூமி கர்த்தருடைய காருண்யத்தினால் நிறைந்திருக்கிறது" என்று சங்.3:5 ல் எழுதியிருக்கிறான். எனவே கர்த்தராகிய தேவன் நீதிமான்களிடத்திலும், நியாயமாய் நடக்கிறவர்களிடத்திலும் பிரியமாயிருக்கிறான் என்பது நமக்கு தெளிவாகத் தெரிகின்றது. அதனால் தான் ஏனோக்கு தேவனுக்கு பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான். இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா தான் எழுதின நிருபத்திலே "ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்து வந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடினவார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங் கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்" என்று ஏனோக்கை குறித்து விவரமாக எழுதியிருக்கிறான். ஏனோக்கு தேவனுக்கு பிரியமானவனாய் இருந்தபடியினாலே அவன் பரிசுத்தாவியினால் ஏவப்பட்டவனாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்து முன்னறிவித்திருக்கிறான். இவ்விதமாகவே அப்போஸ்தலனாகிய பவுலும் 1தெச.3:13 வசனத்தில் "இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக என்று எழுதியிருக்கிறான். மேலும் அவன் தொடர்ந்து 1தெச.4:1 ல் சொல்லியிருக்கிறபடியே "அன்றியும் சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும் தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்தி சொல்லுகிறோம்" நாம் யாவரும் ஏனோக்கைப்போல தேவனுக்கு பிரியமானவர்களாய் நடந்துகொள்ள பிரயாசப்படுவோம்.

**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



*தற்சோதனை பகுதி – 48*

## 48. வேதாகமம் விக்கிரக வழிபாட்டை அனுமதிக்கிறதா?

1. விக்கிரகாராதனைக்காரர் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை
   ☐ வசன ஆதாரம் -----------------------------------------------
2. விக்கிரகாராதனைக்கு விலகி ஓடவேண்டிய அவசியமில்லை
   ☐ வசன ஆதாரம்-----------------------------------------------
3. யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் என்றார் ☐ வசன ஆதாரம்-----------------------------------------
4. நீங்கள் எனக்கு ஒப்பாக மட்டும் வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம் ☐ வசன ஆதாரம் -----------------------------------------
5. விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர் ☐ வசன ஆதாரம்-
6. அவர்கள் வார்ப்பித்த விக்கிரகம் மெய்யே, அவைகளில் சுவாசம் இருக்கிறது ☐ வசன ஆதாரம்-----------------------------------------
7. சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே
   ☐ வசன ஆதாரம்-----------------------------------------------
8. பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களை காத்துக்கொள்ள முடியாது ☐ வசன ஆதாரம்--------------------------
9. இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால் அதை புசிக்கக்கூடாது ☐ வசன ஆதாரம்------------------
10. விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கு ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாக எவரும்போடவில்லை ☐ வசன ஆதாரம்-

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுக்காதீர்!**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

‘ஒரே வழி’ தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50–ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

## வேத அறிவுப்போட்டி 262-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. மகிழ்ச்சியாயிருக்கும் | - நீதி.12:25 |
| 2. ஒரே ஆவியாயிருக்கிறார் | - 1கொ.6:17 |
| 3. ஆம் | - பிர.4:6 |
| 4. பவுல் | - 2கொ.11:5 |
| 5. இரட்சிப்பார் | - ஏசா.33:22 |
| 6. ஒன்றாயிருக்கிறீர்கள் | - கலா.3:28 |
| 7. தூரத்திற்கும் | - எரே.23:23 |
| 8. கோபக்கினை | - எபே.2:3 |
| 9. எரேமியா | - புல.3:42 |
| 10. பவுல் | - பிலி.3:13 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 2. S. சாந்தக்குமாரி | - நாசரேத் |
| 3. J. ஆலிவ் | - கோவை |
| 4. Mrs. ஜெனிதர்மராஜன் | - திருநெல்வேலி |
| 5. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 6. D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 7. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 8. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 9. S. சந்திரகாந்தா | - நல்லூர் |
| 10. K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 11. J.S. ஜெயாமேரித்தாய் | - திண்டுக்கல் |
| 12. D. விஜயகாந்தி | - கூத்தூர் |
| 13. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 14. Mrs. பியூலா ஜேசுராஜன் | - பாண்டிச்சேரி |
| 15. Mrs. கிரேஸ் ஸ்டெல்லா பக்தர் | - சென்னை |
| 16. Mrs. ஃபிராங்களினா ஜான் | -ஊட்டி |
| 17. S. அசோக்குமார் | - தூத்துக்குடி |
| 18. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 19. Mrs. ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 20. A. டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 21. Mrs. வசந்தா ரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 22. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 23. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 24. Mrs. சந்திரா ஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 25. Mrs. ஜெபா மோசஸ் | - விளாத்திகுளம் |
| 26. B. ஸ்டெல்லா | - கூத்தூர் |
| 27. Mrs. ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 28. Mrs. ஜெயாபாணி ஜெபராஜ் | - மேற்கு தாம்பரம் |
| 29. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 30. J. மேரிஜெயக்குமாரி | - மதுரை |
| 31. C. அருள்ராஜ் | - சென்னை |
| 32. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 33. R. ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 34. R. பாரதி | - கோபி |
| 35. Mrs. ஜெபா நியூட்டன் | - திருநெல்வேலி |
| 36. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 37. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 38. Mrs. ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 39. Mrs. கிரேஸ் சங்கீதா | - தூத்துக்குடி |
| 40. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 41. Mrs. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 42. Mrs. ஜெபக்குட்டி மோசஸ் | - திருநெல்வேலி |
| 43. Mrs. தேவிராஜாசிங் | - திருப்பூர் |

## வேத அறிவுப்போட்டி 263-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. எசேக்கியேல் | - எசே.28:9 |
| 2. ஆம் | - கொலோ.3:5 |
| 3. ஆம் | - தானி.10:13 |
| 4. தெசலோனிக்கேய | - 1தெச.3:4 |
| 5. ஆசாரியர்கள் | - ஓசி.4:8 |
| 6. பவுல் | - 2தெச.2:13 |
| 7. வழக்காடுவேன் | - யோவே.3:3 |
| 8. கண்காணிகள் | - 1தீமோ.3:7 |
| 9. புகலிடமில்லை | - ஆமோ.2:14 |
| 10. தீமோத்தேயு | - 2தீமோ.1:8 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 2. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 3. J. ஆலிவ் | - கோவை |
| 4. S. ஜாய்ஸ் சந்திரகாந்தா | - நெல்லூர் |
| 5. Mrs. ஜேன் தர்மராஜ் | - திருநெல்வேலி |
| 6. P. சந்திராடேனியல் | - திருநெல்வேலி |
| 7. Mrs. வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 8. Mrs. ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 9. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 10. E. அதிசயம் | - பனைகுடி |
| 11. A. டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 12. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 13. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 14. Mrs. சத்திராஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 15. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 16. Mrs. ஜெபக்குட்டி மோசஸ் | - திருநெல்வேலி |
| 17. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 18. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 19. K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 20. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 21. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 22. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 23. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 24. S. செல்வராஜ்சாலமோன் | - வள்ளியூர் |
| 25. R. பாரதி | - கோபி |
| 26. S. அசோக்குமார் பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 27. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 28. Mrs. ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 29. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 30. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 31. D. விஜயகாந்தி | - கூத்தூர் |
| 32. B. ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| 33. Mrs. தேவிராஜாசிங் | - திருப்பூர் |
| 34. A. இம்மானுவேல் | - ஈரோடு |
| 35. Mrs. ஜெயாபாணிஜெபராஜ் | - மேற்கு தாம்பரம் |
| 36. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 37. R. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 38. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |

### வாசகரின் கேள்விக்கு பதில்...

**கேள்வி:** ஒவ்வொரு மாதமும் **Ref.No TNV/** வேறு வேறு நம்பராக வருகிறதே ஏன்? நான் எந்த நம்பரை எழுத வேண்டும்?

**பதில்:** ஒவ்வொரு மாதமும் பல இதழ்கள் திரும்பி வருகின்றன. அதனால் அவர்களுடைய பெயரை நீக்கும்போது உங்களுடைய **Ref.No TNV/** எண் மாறும். நன்றி **– ஆசிரியர்**

*நடப்புச் செய்திகள்*

- வரலாறு காணாதவறட்சி தண்ணீருக்கு திண்டாடும் சீனா 37 கோடி மக்கள் பாதிப்பு
- இந்தியா தவிர்க்க இயலாத நட்புநாடு அமெரிக்க அதிபர் மாளிகை
- ஓரினச் சேர்க்கையால் அதிர்ச்சி ஒரே நேரத்தில் கொரோனா, குரங்கு அம்மை, எச்ஐவி...

பெண்கள் பகுதி



# தேவன் ஒருவர் இருக்கிறாரா?
# Is There A God? *-Betty*

நான் காலையில் தேவப் பிரசன்னத்தின் உணர்வோடு எழுந்தேன். நான் தூங்கின போது அவர் தொடர்ந்து கவனமாய் பார்த்துக்கொண்டார் மேலும் அவருடைய முழுக்கவனத்தையும் எதிர்பார்த்த என் வாழ்க்கையின் எல்லா பாகங்களிலும் அன்பு செலுத்தி, பராமரித்து வந்தாரென என்னுடைய இருதயத்தின் வார்த்தைகள் அவருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்தன.

சாத்தான் என் மூளையின் வழியாய் ஒரு எண்ணத்தை விதைக்கிறான். ‘‘நீ தேவனைப் பார்த்திருக்கவில்லை. ஒருவேளை அவர் இருந்தால், நாத்திகர் சொல்வது போல, உன் சிந்தையில் உதித்த ஒரு ஆதாரம் மட்டுமே. பிறகென்ன?

முழுமனதில் கபடில்லாதிருக்கவும் திறந்த மனதுடனிருக்கவும், நான் அந்த எண்ணத்தை பரிசோதிக்கிறேன். பிறகென்ன?

என் இருதயத்தில் வெறுமை உள்ளது. தேவனை நோக்கி நான் செலுத்தியிருந்த மனமார்ந்த அன்பு இதில் உலர்ந்துபோகிறது. பாதுகாப்பான என் உணர்வு மறைகிறது. நான் இதற்கு மேல் வாழ்விற்கான நங்கூரத்தையும் உறுதியையும் கொண்டிருக்கவில்லை. நான் மொத்தத்தில் எங்கே சென்று கொண்டிருக்கிறேன் என்பது பற்றிய அறிவு கொஞ்சமுமில்லை.

என்னுடைய சிந்தையில் என்னைக் காட்டிலும் பெரிதானதொன்றுமில்லை, இன்றைய சரீர ஜீவியத்திற்குரிய தேவைகளைக் காட்டிலும் பெரிதான நோக்கமில்லை- ஏனென்றால் நாளை ஒருவேளை வராது, தொடுவானத்தில் நித்திய வாழ்வு இல்லை, - வெறுமை, அதன்பின் பயம் மற்றும் எனது மனதின் ஒவ்வொரு பிளவிலும் பயனற்ற வெள்ளம்.

இதைவிட தேவனில்லாமல், இது மிகக்கேட்டிலும் அதிகம் ‘‘ஒன்றும் மிஞ்சவில்லை’’. இது, நான் இன்னும் வாழ்கிறேன் மேலும் உலகத்தின் எல்லா சவால்களும் இன்னும் வாழ்கின்றன மேலும் நான் எவ்வித உதவியையும் பெற்றிருக்கவில்லையென மரித்துப் போன நிகழ்வை ஏற்றுக்கொள்வதுடன் இன்னும் இந்த வாழ்வை நான் தைரியமாய் எதிர்த்து நிற்கிறேன். இந்த பீதியான நினைவை மாற்றுவதைக் காட்டிலும் பெரியது வேறொன்றுமில்லை’’. உன்னதமானவரிடத்தில் விசுவாசத்தை இழந்தவர்களுக்கு தொடுவானத்தில் தற்கொலை நேரிடக் காத்திருப்பதில்லை என நான் ஆச்சரியப்படுகிறேன்.

ஆனால் ஒரு உறுதியான எண்ணம் தனிமைபயத்தினை துளைத்துவிடுகிறது. ‘‘ஆம், நீ வாழ்ந்திடு உன்னைச் சுற்றியுள்ள வாழ்வின் எல்லா அதிசயங்களும் காண்கின்ற உலகத்தின் அதிசயங்களும் வாழ்கின்றன. ஒரு கணவனின் இழப்பு அல்லது பெற்றோருடைய இழப்பு அல்லது ஒரு குழந்தை, நீ பார்த்திருப்பவற்றின் இழப்பு உன்னுடைய மிகப்பெரிய நாசமாயிருக்காது. நீ தேவனைக் கண்டிராத போது இழப்பது தான் மிகப்பெரிய நாசமாயிருக்கும். உன்னுடைய இருதயத்தில் இந்த நிகழ்வுகளின் பரிபூரணத்துவம் சாத்தானுடைய பரிகாசத்தோடும் சந்தேகத்தைத் தூண்டும் செயலோடும் பேசுகிறது. மனிதருடைய மனதில் கனவில் உதித்த ஒரு ஆதாரமாக மட்டும் தேவன் இருந்திருப்பாரானால், மனிதனது ‘முன்னேற்றம்’ மற்றும் ‘உண்மையற்றசெயல்’ போன்ற எல்லாவற்றிலும் மனிதத்தன்மை தேவனிலுள்ள பழைய வழக்கமான நம்பிக்கையை வளர்ச்சியடையப்பண்ணியிருக்காதா? ஆனால் மனித சமுதாயத்தின் உள்ளான ஆத்துமா ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கதறுகிறது (சங்.27:7-10).

இன்றும்கூட, இரண்டு வகையான ஜனங்கள் உலகத்தில் இருக்கின்றனர்: விசுவாசிகளை விட தேவனை மறுதலிக்கிற உணர்வினையுடையவர்களும் (நடக்கையிலும் மனக்கிலேசத்திலும்) பிரச்சனை விகிதம் அதிகமுள்ள, தற்கொலை விகிதம்

அதிகமுள்ள புள்ளிவிவரத்தை உடையவர்கள் சிலராக இருக்கின்றனர்.

இதற்கு எதிர் வரிசையில் உள்ளவர்கள் அநேகராகிய விசுவாசிகள். சிலரில் உருவாகிறது அல்லது வேறொன்றில், அவர்கள் ஜீவனுள்ள தேவனிடத்தில் பயபக்தியோடுகூடிய உணர்வோடு உண்மையாக ஒட்டிக்கொண்டுள்ளது. அவர்கள் தேவனைப் பற்றிய தங்களுடைய அறிவில் சத்தியத்திலிருந்து ஒரு கோடி மைல் தொலைவில் இருக்கலாம், ஆனால் அவர்களுடைய இருதயங்கள் தேவன் ஒருவர் உண்டு என உறுதியாயிருக்கிறது.

இருதிறத்தாருடைய மனதில், அடிப்படைகாரணி தேவனோடு இடைபடுகிறது! சில ஜனங்கள் மறுதலிக்கும் அவஸ்தையில் இருந்தபோதிலும் வேறெந்த ஒரு விஷயமும் இப்பேர்பட்ட தகுதியையும் ஒட்டுமொத்த முன் அனுபவத்தையும் உரிமை பராட்ட முடியாது இந்த உண்மை ஒன்றுமட்டுமே இறுதியாக பேசுகிறது. தேவன் இல்லாதிருந்தால், யாருடைய சாயலில் நாம் உருவாக்கப்பட்டுள்ளோம், பெற்றோருக்கு காணாமல் போன ஒரு குழந்தையைப் போல யாரை நோக்கி நம்முடைய ஆவிகள் கதறுகிறது, இந்த பிரபஞ்சம் மற்றும் அவரிடத்திற்கு எட்டாத தொடர் தூரமும் பல வருடங்களாக இருந்துவருகின்ற யுகத்திற்கு மேலாக வளர்ச்சியடைந்திருக்கும்.

இன்னொரு எண்ணம் மனதிற்கு வருகிறது: ஏதோ சாத்தானை நான் ஒருபோதும் கண்டதில்லை, ஆனால் அவன் இருக்கின்றான் என்பது பற்றி சந்தேகமில்லை. ஏன்? முதல் காரணம்: பாவம் மற்றும் தீமையாக எப்பொழுதும் அவனுடைய கிரியைகளை சுற்றிலும் என்னால் காணமுடிகிறது. அதன் விளைவாக அழிவு தன்னுடைய பங்கை நிறைவேற்றுகிறது. இரண்டாவது காரணம்: சாத்தானுடைய தந்திரங்களுக்கு எதிர்ப்பைக்காட்டுவதில், தேவன் நம்முடைய எண்ணங்களின் மூலம் சாத்தான் தொடர்ச்சியாக இருக்கின்றான் என்பதைக் குறித்த சரமாரியான கேள்விகளையும் சந்தேகங்களையும் விவரிக்கிறதில்லை! தேவன், தாமே, சாத்தான், கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல எவனை விழுங்கலாமோ என்று பூமிமுழுவதும் சுற்றித்திரிகிறான் என நம்மிடம் சொல்லுகிறார் (1பேது.5:8). தேவன் சாத்தானின் உண்மையான நிலையை அறிந்து நம்முடைய விசுவாசத்தை ஜாக்கிரதையாய் காத்துக் கொள்கிறார் - ஏனென்றால் அவர் உண்மையுள்ளவர் - தேவன் நாம் முன்னெச்சரிக்கையாய் இருக்கும்படி விரும்புகிறார் அப்போது தான் நம்முடைய தற்காப்புகள் பலப்படுத்தப்பட்டிருக்கும்.

சாத்தான் இருக்கின்றான் என்பதற்கு உலகத்தில் தீமையானது வினாவற்ற சாட்சியாக எங்குமிருக்கிறபடியினால், இக்காரணத்தினால் இதைப் பின்பற்றுகையில் இது அவித்துப்போடக்கூடாத நன்மையல்ல, மாறாக, தேவன் இருக்கின்றார் என்பதற்கும் ஆதாரமிருக்கிறதல்லவா? மேலும் சாத்தான் பொய்க்குப் பிதாவாயிருக்கிறான் என தேவன் நம்மை முன்னெச்சரிக்கிறபடியினால், தேவனுடைய எதிராளி தொடந்து சந்தேகத்தைத் தூண்டுகிறவனாயிருப்பான் என நாம் எதிர்பார்ப்பதில்லையா? (யோவா.8:44)

“நான் தூங்கினபோது உம்முடைய ஜாக்கிரதையான பராமரிப்பிற்காகவும் என்னுடைய கண்விழிப்பின் போது என்னை உற்சாகப்படுத்தும் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கைக்காகவும் உமக்கு நன்றி பிதாவே”

நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. ......நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்பிவிக்கத்தக்கவன் இல்லை........” - ஏசா.43:11-13.

**என்ன ஆச்சரியம்!**

ஒவ்வொரு மாதமும் எமது இதழை 10 தேதி அனுப்புகிறோம். அவ்விதமாகவே ஆகஸ்ட் மாத இதழையும் அனுப்பினோம். நமது வேத அறிவுப்போட்டியாளர் S. சாந்த குமாரி அவர்கள் மாத இதழைப் பெற்று, 11.8.2022 தேதியிட்டு, பத்துகேள்விகளுக்கும் விடைகளை சரியாக எழுதி அனுப்பிவிட்டார். எங்களுக்கு 12ம் தேதியே வந்துவிட்டது. சகோதரியைப் பாராட்டுகிறோம். விரைவாக செயல்படும் நமது இந்திய அஞ்சலகத்திற்கு நன்றி சொல்லுகிறோம்.



பெண்கள் பகுதி

# நோவா – Noah

*-Glory Arjunan*

அன்பான சகோதரிகளே, பரிசுத்த வேதாகமம் என்பது ஒரு வரலாற்றுப் புத்தகம் என்பதை அறிவீர்களா? அநேகர் இப்புத்தகத்தை கிறிஸ்தவர்களின் புனிதநூல் என்று தான் நினைக்கின்றனர். இது ஒரு வரலாற்றுப் புத்தகம்! வானமும் பூமியும் எவ்வாறு உண்டாக்கப்பட்டது? அதிலுள்ளவைகள் யாவரையும் உண்டாக்கியது யார்? பூமியில் வாழ்ந்து வருகின்ற மனித இனத்துக்கே ஆதி தகப்பன் யார்? அவன் எவ்வாறு உண்டாக்கப்பட்டான்? அவனது ஏற்ற துணையாகிய அவனது மனைவி யார்? பூமி முழுமைக்கும் ஒரே சமயத்தில் இயற்கை பாதிப்பு ஏதேனும் ஏற்பட்டதா? இது போன்ற அத்தனை விஷயங்களையும் நடந்த விதமாவே விளக்குகின்ற புத்தகம் தான் பரிசுத்த வேதாகமம். அப்படியானால் இது ஒரு வரலாற்று புத்தகம் தானே? இப்புத்தகம் யாவருக்குமுரிய பொதுமறை தானே? ஆனால் இன்று இதை உலகமக்கள் நம்புவதில்லை தேவக்கிருபையால் பிதாவினால் முன்குறிக்கப்பட்ட அனைவரும் நம்புகின்றனர். நல்லது. முதல் மனிதன் ஆதாமின் 9வது வழித்தோன்றல் நோவாவைப் பற்றித் தான் இங்கே பார்க்கப்போகின்றோம். அது மாத்திரமல்ல இவனது ஜீவியம் கிறிஸ்தவர்களாகிய நமக்கு எவ்விதமான படிப்பினையும் கொடுக்கிறது என்பதைப் பற்றியும் ஆராய்வோம்.

நோவாவைப் பற்றி ஆதியாகமம் 6 முதல் 9:19 வரையிலான வசனங்கள் நமக்குத் தெளிவான உண்மை சம்பவத்தை விளக்குகின்றன.

**நோவா ஒரு நீதிமானாக வாழ்ந்து வந்தவன்.** He was a righteous man in a wicked world (ஆதி.6:9). ஏன் இவன் நீதிமான் என்று கருதப்பட்டான்? இவன் வாழ்ந்து வந்த நாட்களில் "மனுஷனுடைய அக்கிரமம் பூமியில் பெருகினது என்றும் அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதி.6:5-6) என்று வேதம் கூறுகிறது. அப்படியானால் அக்கிரமம் நிறைந்த தன் காலத்தில் இருந்த ஜனங்கள் மத்தியில் இவன் நீதிமானாக வாழ்ந்து வந்திருக்கிறான் எனவே நீதிமானாகக் கருதப்படுகிறான்.

**நோவா உத்தமனாகயிருந்திருக்கிறான்.** He was perfect in his generation ஆம். உத்தமன், சரியானவனாக வாழ்ந்து வந்தான். அவனைக் குறித்து எவ்விதமான குறையும் சொல்லமுடியாதவனாக வாழ்ந்திருக்கிறான். எனவே தான் அவன் உத்தமன் எனக்கூறப்படுகிறது. கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டு வாழ்கிறோம். உத்தமர்களாக, அல்லது சரியானவர்களாக வாழ்கிறோமா? வேதத்தின் வெளிச்சத்தில் நம்மை ஆராய்ந்து பார்த்து அறிந்து கொள்வோம். உத்தம் என்றால் என்ன என நாம் நினைக்கலாம். தேவன் நம்மைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறார். அவருக்கு முன்பாக மன உண்மையாயிருந்து நம்முடைய துர்க்குணத்திற்கு, கேடான சிந்தனைகளுக்கு நம்மை விலக்கிக் காத்துக்கொள்வதே உத்தமம் (2சாமு.23:24). இந்த நோவாவைப் போல, யோபுவும் "....உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகினவனுமாயிருந்தான் (யோபு 1:1) என்று வேதம் கூறுகிறது. இவர்களெல்லாம் உத்தமர்கள் என அழைக்கப்பட காரணம், இவர்கள் தேவனுக்குப் பயந்து,

துர்குணத்திற்கு இடமளிக்காமல், பொல்லாப்புக்குத் தங்களை விலக்கிக் காத்து வாழ்ந்திருக்கின்றனர். நாமும் இந்த பொல்லாத உலகத்தில் பாவத்திற்கு நம்மை விலக்கிக் காத்துக்கொள்வோம். என்ன செய்கிறது? மிக உண்மையாக, நேர்மையாக வாழ்ந்தால் உலகம் பரியாசம் பண்ணுகிறதே என்று நினையாதிருங்கள். நிச்சயமாகவே உலகம் நம்மைப் பார்த்து பரியாசம் பண்ணும். அன்று நோவாவைப் பார்த்து கூட அந்த அக்கிரமக்காரர்கள் பரியாசம் பண்ணியிருக்கலாம் அந்த ஜனங்களுக்குள்ளே தான் அவன் உத்தமனாயிருந்தான். எனவே திருஷ்டாந்தமாக இருக்கும் நம் முற்பிதாக்களைப் பார்த்து, நாமும் உத்தமமாக நடக்கப்பிரயாசப்படுவோம். கடல் மீன்கள் உப்புநிறைந்த நீருக்குள் வாழ்கின்றன இருந்தபோதிலும் அவைகளுக்குள் உப்பு செல்வதில்லையே! சிந்திப்போம்!

மேலும் **நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்** (ஆதி.6:9).

He walked with God: எப்பேர்பட்ட அநுபவம் இது! தேவனை விட்டுப் பிரியாதவனாக அவரோடே கூட சஞ்சரித்துக்கொண்டிருந்தான். இவனுடைய முற்பிதா ஏனோக்கும் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான் (ஆதி.5:24) என வாசிக்கிறோம். எவ்வளவு அருமையான வழித்தோன்றல்கள்! இன்றைய நாட்களில் நாமும் நம்முடைய சந்திகளும் எப்படியிருக்கிறோம்? தேவனோடே எப்போதும் சஞ்சரிக்கிறவர்களாக இருக்கிறோமா? மரியாள் கூட இயேசுவை விட்டு தன்னை விடுவித்துக்கொள்ளாதவளாய் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டவளாய் இருந்தாள் அல்லவா? இயேசுவும் தம்மைப் பற்றி பேசும்போது தாம் பிதாவோடும் பிதாவிலேயும் இருக்கிறேன் என்று சொல்லுகிறார். "....நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்" (யோவா.14:21) என்றார். இது தேவனுக்குப் பிரியமானதாக இருக்கிறது. ஒரு குழந்தை தன் தாயின் மடியிலோ, தன் தகப்பனுடைய பராமரிப்புக்குள்ளே இருக்கும்போது பாதுகாப்பாக இருக்கும். ஒரு தாயும் தகப்பனும் தன்னுடைய பிள்ளைகள் தங்களை விட்டு பிரியாதிருக்கும் போது அது அவர்களுக்குப் பாதுகாப்பு என்று உணருகின்றனர். அவ்வாறாகவே நமது பரமபிதாவும் தம்முடைய பிள்ளைகள் தம்மோடு சஞ்சரித்துக்கொண்டு, தமது பாதுகாப்பிற்குள் இருப்பதையே விரும்புகிறார். ஏனெனில் இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் (பிசாசின்பிடிக்குள்) கிடக்கிறது எனவே அவர் சமூகத்தை விட்டு நாமும் நம் சந்ததிகளும் விலகாதிருப்போமாக. உங்கள் சந்ததிக்கு நோவாவின் வரலாற்று சம்பவத்தைப் பற்றி கூறுங்கள்.

**தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்து முடித்தான்.**

He did according to all that God commanded him: அப்படியே செய்து முடித்தான் என அழுத்தமாக சொல்லப்பட்டிருப்பதை ஆதியாகமம் 6:22 ல் வாசிக்கிறோம். என்ன தான் அப்படிச் செய்து முடித்தான்? கர்த்தர் சொன்னபடியே ஒரு பேழையை செய்து முடித்தான். ஆம் தேவனாகிய கர்த்தர் இவனையும் இவன் குடும்பத்தையும் காக்கும்படிக்கு ஒரு பேழையை உண்டுபண்ணச்சொன்னார். "நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி அதை உள்ளும் புறம்புமாகக் கீல்பூசு. நீ அதைப் பண்ணவேண்டிய விதம் என்னவென்றால், பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதன் அகலம் ஐம்பது முழமும், அதின் உயரம் முப்பது முழமுமாய் இருக்க வேண்டும். நீ பேழைக்கு ஓர் ஜன்னலை உண்டுபண்ணி, மேல்தட்டுக்கு ஒரு முழத் தாழ்த்தியிலே அதைச் செய்து முடித்து, பேழையின் கதவை அதின் பக்கத்திலே வைத்து, கீழ் அறைகளையும், இரண்டாம் தட்டின் அறைகளையும் மூன்றாம் தட்டின் அறைகளையும் பண்ணவேண்டும்" (ஆதி.6:14-16) என்றார். மேலும் "சகலவித மாம்சமான ஜீவன்களிலும் ஆணும் பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு

உன்னுடன் உயிரோடே காக்கப்படுவதற்கு பேழைக்குள்ளே சேர்த்துக்கொள். ஜாதிஜாதியான பறவைகளிலும், ஜாதிஜாதியான மிருகங்களிலும், பூமியிலுள்ள சகல ஜாதிஜாதியான ஊரும் பிராணிகளிலும் வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உயிரோடே காக்கப்படுவதற்கு உன்னிடத்திலே வரக்கடவது. உனக்கும் அவைகளுக்கும் ஆகாரமாகச் சகலவித போஜனபதார்த்தங்களையும் சேர்த்து, உன்னிடத்தில் வைத்துக்கொள் என்றார் நோவா அப்படியே செய்தான். தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்" (ஆதி.6:19-22).

அன்பு சகோதரிகளே, நாம் நம்வாழ்க்கையில் என்னென்னவோ திட்டங்களை வகுத்து, பின்பு அவைகளைச் செய்து முடிக்கு முன் பல்வேறு மாற்றங்களையும் திருத்தங்களையும் செய்கிறோம். நமக்கோ எதிலும் திருப்தி அல்லது மன நிறைவு வருவதில்லை. நம் ஆவிக்குரிய வாழ்க்கையில்கூட சில வேளைகளில் தேவனுடைய சித்தங்களையும் கட்டளையும் நமக்கேற்றவாறு மாற்றக்கூடியவர் களாகவும் தேவனுக்கே ஆலோசனைகளைக் கூறக்கூடியவர்களாகவும் இருக்கிறோம். ஆனால் நோவா அப்படியல்ல. தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து முடித்தான். எனவே "கர்த்தர் நோவாவை நோக்கி: ...இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்" என்றார் (ஆதி.7:1). God witnessed that he was a righteous man in a wicked world அக்கிரமம் நிறைந்த இவ்வுலகில் நாமும் நோவாவைப் போல நீதிமானாக வாழ முயற்சிப்போம்.

✦ 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை பெற்று அதை விரும்பி வாசிக்கக்கூடிய 100 புதிய வாசகர்களுடைய முகவரி கேட்டிருந்தோம். அதை சேகரித்து அனுப்பிவைத்துள்ள அன்புக்குரிய வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்.




1. C. ஆறு முகப்பெருமாள்@ ஆபிரகாம்
தூத்துக்குடி மாவட்டம்

2. D. டயானா ஏஞ்சல்
திருநெல்வேலி மாவட்டம்

உங்கள் முயற்சியை
கர்த்தர் ஆசீர்வதிக்க
உங்கள் குடும்பத்திற்காக
ஜெபிக்கிறோம் – ஆசிரியர்

## நான் யார்? – Who Am I?



- நான் யோனாவின் குமாரன்
- என் முதற் பெயர் சீமோன்
- நான் இயேசுவை மூன்று முறை மறுதலித்தேன்
- ஆண்டவர் வார்த்தைப்படி வெள்ளிப்பணம் கண்டேன்
- மீண்டும் என் வேலைக்குத் திரும்பினேன்
- என் நிழல் பட்டு வியாதியஸ்தர் குணமானார்கள்
- நாங்கள் முதல் நூற்றாண்டு சபையில் தூண்களாக இருந்தோம்

சிறுவர் பகுதி

## சிறிய பெண் – பெரிய காரியம்
## A Little Maid - A Big deal

- Mrs.Maha

பழைய ஏற்பாடு காலத்தில் ஒரு சிறு பெண்ணின் சம்பவத்தின் மூலம் சிறு பிள்ளைகள் எல்லாரும் ஒரு பாடத்தை கற்றுக்கொள்ளப்போகிறோம். வாங்க வேதத்தில் சிறுபெண் செய்த பெரிய காரியத்தை பார்ப்போம். எலிசா தீர்க்கதரிசி வாழ்ந்த காலத்தில் சீரியா தேசத்திற்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்து அடிமையாக ஒரு பெண் நாகமான் படைத்தலைவன் வீட்டிற்கு அடிமையாக கொண்டு போகப்பட்டாள்.

அவள் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்து கொண்டுவந்தாள். அவள் அடிமையாக கொண்டு போகப்பட்டாலும், தன்னை சிறைபிடித்துபோன இடத்தில் நன்மை செய்தாள். நாகமான் குஷ்டரோகம் நீங்க இஸ்ரவேல் தேசத்தில் தீர்க்கதரிசி இருக்கிறான் என்று சொல்லி நல்ல வழியை காண்பித்தாள். இவளுடைய வார்த்தையை நம்பி நாகமான் இஸ்ரவேல் தேசத்தில் எலிசாவிடம் சென்று சுகத்தை பெற்றுக் கொண்டான்.

பாருங்க தம்பி, தங்கைகளா, இந்த சிறுபெண் பெயர் 2இரா.5ம் அதிகாரத்தில் இல்லை. ஆனால் இந்த சிறியபெண் பெரியகாரியம் செய்தாள். அடிமை என்றால் விடியற்காலை எழுந்துகொள்ள வேண்டும், தொடர்ந்து வேலை செய்வேண்டும், கஷ்டப்படவேண்டும். விளையாட முடியாது, அம்மா, அப்பாவிடம் கொஞ்ச முடியாது, சுற்றுலா போக முடியாது, படிக்க முடியாது. இப்படி இருந்த பெண் தனக்குத் தெரிந்த நல்ல விஷயத்தை சொல்லி பெரிய நன்மை செய்தாள். நாமும் மற்றவர்களுக்கு நன்மை செய்யக் கூடியவர்களாக இருக்கவேண்டும். நீங்களும் நல்லதையே சொல்லுங்க.



**மனப்பாடவசனம்**

**"நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாதுகாக்கும்"நீதிமொழிகள் 2:11**

**தெரிந்து கொள்ளுவோம்**

- வெள்ளி அதிகமாக வெட்டி எடுக்கப்படும் நாடு மெக்ஸிகோ
- கரு உருவாகும்போது முதலில் தோன்றும் உறுப்பு இருதயம்
- இருளில் ஒளி வீசும் தனிமம் 'பாஸ்பரஸ்'
- மாலை நட்சத்திரம் என்று அழைக்கப்படும் கோள் வீனஸ்
- ரஷ்யாவின் தேசிய மிருகம் 'கரடி'
- முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட ஆன்டிபயாட்டிக் மருந்து 'பென்சிலின்'
- 'கிழக்கு பிரிட்டன்' என அழைக்கப்படும் நாடு ஜப்பான்




JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW

Contact Us: 94435 58041

## வேத அறிவுப் போட்டி எண்: 265

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. பூமியிலுள்ள தேவர்களையெல்லாம் கர்த்தர் மெலிந்துபோகப்பண்ணுவார் அப்பொழுது தீவுகளிலுள்ள சகல புறஜாதிகளும் அவரவர் தங்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து எவரைப் பணிந்துகொள்வார்கள்?
2. தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. அதிகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும், இதோ, கொஞ்சம் கிடைத்தது என சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்ற தீர்க்கன் யார்?
4. அந்தப் பழைய கற்பனை நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிற வசனந்தானே என எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. எந்த தீர்க்கதரிசியோடே பேசின தூதன் திரும்பிவந்து நித்திரை பண்ணுகிற ஒருவனை எழுப்புவதுபோல் தன்னை எழுப்பினான் என்கிறான்?
6. சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரையும், மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரையும் ஒப்புவிக்குமா?
7. நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுக்கள் கடினமாயிருக்கிறது என்று கர்த்தர் எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு பேசினார்?
8. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் என்ன செய்வார்?
9. தன் சகோதரர்களை நோக்கி: பயப்படாதிருங்கள் நான் தேவனா என்று சொன்னவன் யார்?
10. அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்று இயேசு எவனைக் குறித்து சொன்னார்?

## வேதாகம ஆய்வு... 49

## ஓக் - Og



1. பாசான் ராஜா – இராட்சதன் எனறு அர்த்தம்
2. இவனுக்கு 60 பட்டணங்கள் இருந்தது
3. மோசே இவனை மேற்கொண்டான் – எண்.21:33–35
4. இஸ்ரவேலர் பாசானின் ராஜாவாகிய ஓகின் தேசத்தையும் கட்டிக்கொண்டார்கள் – நெகே.9:22
5. பாசானின் ராஜாவாகிய ஓகை அழித்தவரைத் துதியுங்கள் – சங்.136:20

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
September 2022

சகோதரர் அர்ஜுனன் & குளோரி தம்பதியர்
அவர்களால் ஆகஸ்ட் மாதம் 1992 ல்
துவங்கப்பட்ட 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' என்ற
தமிழ் மாத இதழ் ஆகஸ்ட் மாதம் 2022 ல்
30 ம் ஆண்டுக்குள்
அடியெடுத்துவைக்கிறது.
தேவனுக்கே மகிமையுண்டாவதாக!





கர்த்தருடைய ஊழிய
தம்பதியர் ஐக்கியக்கூட்டம்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

